**Lang. Code : 17**

इस पुस्तिका में **20** पृष्ठ हैं ।
This booklet contains **20** pages.

# AAT-20-I

**प्रश्न-पत्र I / PAPER I**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग IV & V / PART IV & V**

**परीक्षा पुस्तिका संकेत**
**Test Booklet Code**

**I**

**परीक्षा पुस्तिका संख्या**
**Test Booklet No.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20)पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें । / For instructions in Tamil see Page 2 of this Booklet.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **I** । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा I - (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा II - (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **I**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ______
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) ______
Roll Number : in figures
: (शब्दों में) ______
: in words
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ______
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ______ निरीक्षक के हस्ताक्षर : ______
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile signature stamp of
Centre Superintendent ______

I

**Lang. Code : 17**

இந்த நூற்கட்டு **20** பக்கங்கள் கொண்டது

# AAT-20-I

## தாள் I

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**I**

## தமிழ் மொழி துணை நூற்கட்டு
## பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

### தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி **IV** (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி **II**) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி **I, II, III** க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி **IV, V** ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி **IV** மற்றும் பகுதி **V** ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **I** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு *2* பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி **IV** : மொழி - **I** (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி **V** : மொழி - **II** (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி **IV** இல் மொழி **I** க்கும், பகுதி **V** இல் மொழி **II** க்கும் தலா *30* வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்)____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில்____________________

: எழுத்தில்____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்)____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்____________________

Facsimile signature stamp of Centre Superintendent____________________

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - IV** [**கே.எண்:** ***91 - 120***] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - IV [Q.No. 91-120],** if they have opted **TAMIL** as **LANGUAGE - I** only.

## PART – IV
## LANGUAGE – I
## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 91-99)**

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கௌதம புத்தரால் வட இந்தியாவில் தோன்றிய பௌத்தமதம், கடைச்சங்கக் காலத்திற்குப் பின்னர், அதாவது கி.பி. முதலாவது, அல்லது இரண்டாவது நூற்றாண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் வந்திருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இவ்வாறு இவர்கள் கருதுவதற்குக் காரணம் யாதெனில், கடைச்சங்க நூல்களில் பௌத்தமதத்தைப் பற்றிக் கூறப்படாததுதான். ஆனால், இவர்கள் கருத்து தவறெனத் தெரிகின்றது. பௌத்த மதத்தைப்பற்றிய குறிப்புகள் கடைச்சங்கத் தொகை நூல்களுட் காணப்படவில்லையாயினும், அச்சங்க காலத்து நூல்களில் காணப்படுகின்றன. அதாவது, கடைச்சங்க காலத்து நூல்களாகிய மணிமேகலை சிலப்பதிகாரங்களில் இந்த மதத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளன. அன்றியும், பௌத்தமதப் புலவர்கள் இயற்றிய செய்யுள்கள் கடைச்சங்கத் தொகை நூல்களுட் காணப்படுகின்றன. மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தை இயற்றிய பௌத்தராகிய கூலவாணிகர் சாத்தனார் அருளிச்செய்த செய்யுள்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்னும் நூல்களுள் தொகுக்கப்பட்டுள்ளன. இளம்போதியார் என்பவரும் கடைச்சங்க காலத்திலிருந்த பௌத்தப் புலவர். இவரது பெயரே இவர் பௌத்தர் என்பதைத் தெரிவிக்கின்றது. இந்த இளம்போதியார் இயற்றிய செய்யுள் ஒன்று நற்றிணை என்னும் கடைச்சங்கத் தொகை நூலில் 72-ஆம் பாட்டாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, கடைச்சங்க நூல்களில் பௌத்தப் புலவர்களின் செய்யுள்கள் தொகுக்கப் பட்டிருக்கின்றபடியினாலே, அச்சங்க காலத்துக்குப் பிறகுதான் பௌத்த மதம் தமிழ்நாடு வந்திருக்கக் கூடும் என்பது தவறாகின்றது. கடைச்சங்க காலத்திலேயே, அதாவது, கி.பி முதலாவது, அல்லது இரண்டாவது நூற்றாண்டிலேயே பௌத்தம் தமிழ்நாட்டில் இருந்து என்பது நன்கு விளங்குகின்றது.

**91.** ______ புலவர்களின் ______ கடைச் சங்க நூல்களுள் காணப்படுகின்றன.

(1) சங்கப் / காப்பியங்கள்
(2) பௌத்த சமயப் / கொள்கைகள்
(3) பௌத்த மதப் / செய்யுள்கள்
(4) பெண்பால் / பாடல்கள்

**92.** மணிமேகலை, சிலப்பதிகாரம் இரண்டிலும் ______ பற்றிக் கூறப்பட்டுள்ளன, ______ புலவர்களின் செய்யுள்கள் கடைச் சங்கத் ______ காணப்படுகின்றன.

(1) சமண சமயம், சமணத், தொகைநூல்களில்
(2) பௌத்த மதத்தைப், பௌத்த மதப், தொகை நூல்களில்
(3) கௌதம புத்தர், வடமொழிப், தொகை நூல்களில்
(4) பௌத்த மதத்தைப், தமிழ்ப், தொகை நூல்களில்

93. கடைச் சங்க காலத்து ________ புலவர் _________.

(1) பெரும், சாத்தனார்
(2) பௌத்தப், பலர் இருந்தனர்
(3) கூலவாணிகர் என்ற, தொகை நூலில் எழுதியிருக்கிறார்
(4) பௌத்த மதப், இளம்போதியார்

94. கடைச் சங்க நூல்களில் ________ செய்யுள்கள் ___________, அதற்கு முன்பே பௌத்தம் ____________ இருந்தது.

(1) பௌத்தப் புலவர்களின், தொகுக்கப்பட்டிருப்பதால், தமிழ்நாட்டில்
(2) அதிகமான, உள்ளதால், வட நாட்டில்
(3) பௌத்தப் புலவர்களின், இடம்பெறாததால், தமிழ்நாட்டில்
(4) பெண்பால் புலவர்களின், இடம்பெற்றிருப்பதால், உயர்வாக

95. _________ இயற்றிய செய்யுள் _________ இல் ________ பாடலாக உள்ளது.

(1) சாத்தனார், நற்றிணை, முதலாம்
(2) இளம்போதியார், நற்றிணை, இறுதிப்
(3) இளம்போதியார், நற்றிணை, எழுபத்திரண்டாம்
(4) இளம்போதியார், மணிமேகலை, எழுபத்திரண்டாம்

96. நூற்றாண்டு என்ற சொல் இப்பகுதியல் எத்தனை இடங்களில் உள்ளது ?

(1) ஏழு
(2) மூன்று
(3) இரண்டு
(4) நான்கு

97. கி.மு எனக் குறிக்கப்பட்டுள்ளது _________ நூற்றாண்டு, கி.பி எனக் குறிக்கப்பட்டுள்ளவை ________, ________ நூற்றாண்டுகள்.

(1) ஐந்தாம், முதலாம், இரண்டாம்
(2) முதலாம், ஐந்தாம், ஆறாம்
(3) இரண்டாம், மூன்றாம், நான்காம்
(4) ஐந்தாம், ஆறாம், ஏழாம்

98. கடைச் சங்க காலத்திற்குப்பின் பௌத்த மதம் தமிழகத்திற்கு வந்திருக்கக் கூடும் என்று கருதும் சிலர் கூறும் காரணம் :

(1) பௌத்த மதம் வட இந்தியாவில் தோன்றியது.
(2) கடைச்சங்க நூல்களில் பௌத்த மதம் பற்றிக் கூறப்படவில்லை என்ற எண்ணம்.
(3) கடைச் சங்க நூல்களில் பௌத்த மதம் சிறப்பிடம் பெறுகிறது.
(4) தொகை நூல்களில் இந்த மதம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**99. கி.பி முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டுக்குப் பிறகு வந்ததாகக் கருதப்படும் _______________ மதம் வட இந்தியாவில்_______தோன்றியது**

(1) பௌத்த மதம், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில்

(2) கௌதமர், கி.பி முதலாம் நூற்றாண்டில்

(3) பௌத்த மதம், கி.பி ஐந்தாம் நூற்றாண்டில்

(4) தமிழர், கி.மு ஐந்தாம் நூற்றாண்டில்

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 100-105)**

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பெயரும் சதியென்ற நாமமும்.

அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம்

**100. தாயின் பெயருடன் இணைந்த வை :**

(1) பெண்மை, வெற்றி, கூத்து

(2) சதி யென்ற நாமம், அன்பு, ஆசை

(3) தண்மை, இன்பம், நற்புண்ணியம்

(4) தனிமை, இனிமை, புண்ணியம்

**101. வாழ்க எனப்பட்டது _______ என்பதற்காக, கைகொட்டி வாழ்த்துதல் _________ பற்றியது.**

(1) ஆடுதல், அன்பு

(2) அன்பு வாழ்க, ஆசைக் காதல்

(3) காதல் வாழ்க, வாழ்க அன்பு

(4) துன்பம், ஆடுதல்

**102. தாய்முலைப் பால் ________, மனைவியின் வார்த்தைகள் ______.**

(1) வலிமை சேர்ப்பது, மானம் சேர்ப்பது

(2) மானம் சேர்ப்பது, வலிமை சேர்ப்பது

(3) அன்பு சேர்ப்பது, துன்பம் சேர்ப்பது

(4) வலிமை நீக்கும், மானம் சேர்க்கும்

**103. ஆடுவோம் என்ற சொல் _______ இடங்களில் வந்துள்ளது, ________, _________ என்ற சொற்களுடன் இணைந்தும் வந்துள்ளது.**

(1) நான்கு, வாழ்க, வெல்க

(2) இரண்டு, பெண்மை, வெல்க

(3) மூன்று, அமைதி, களிப்பு

(4) இரண்டு, அமைதி, களிப்பு

104. பெண்கள் அறம் __________ அழிப்பது என்பதன் பொருள் ________.

(1) கலி, தீய காலத்தை அழிப்பது

(2) வலிமை, தீயவை செய்வது

(3) கலி, பிள்ளைகள் பெறுவது

(4) துன்பம், புண்ணியம் சேர்ப்பது

105. கூத்து என்ற சொல் பாடலில் எந்தப் பொருளில் வந்துள்ளது?

(1) நாடகம்

(2) மகிழ்ச்சி நடனம்

(3) கதைப் பாடல்

(4) பெண்ணின் பெருமை

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 106-120)**

106. இலக்கணம் கற்பிக்கப் பின்வருவனவற்றில் எந்த முறை பயனளிக்கக் கூடியது?

(1) இலக்கண விதிகளைக் கற்பித்து அதனுடன் எடுத்துக் காட்டுகள் தருதல்.

(2) ஒரு பாடப்பகுதியை மொழி பெயர்க்கும் போது இலக்கண விதிகளைக் கற்பித்தல்.

(3) ஒரு குறிப்பிட்ட இலக்கண நூலைப் பயன்படுத்தி இலக்கணத்தைக் கற்பித்தல்.

(4) ஒரு பொருளுடைய பின்புலத்தில் இலக்கணத்தின் விதிகளைக் கண்டறியும் வகையில் இலக்கணத்தைக் கற்பித்தல்.

107. 'சமூக உறவாடல்' என்ற கோட்பாடு யாருடன் தொடர்புடையது :

(1) பாணினி

(2) ஸ்கின்னர்

(3) வியக்கோட்ஸ்கி

(4) கோல்பெர்க்

108. மொழித் தன்வயமாக்களுக்குப் பின்வரும் முறைகளில் எந்த ஒன்று குழந்தைகளுக்கு உதவக் கூடியதாக உள்ளது ?

(1) ஒரு குழந்தை அதிகம் பேச வாய்ப்பளிக்காத ஒரு வீட்டுச் சூழல்.

(2) வீட்டிலும் வெளிப்புறச் சூழலிலும் பெரியவர்கள் பேசுவதைக் கேட்பது.

(3) சரியான வாக்கை / வாக்கியத்தை மீண்டும் மீண்டும் பேசவைத்தல்.

(4) குழந்தைகளுடன் இணைந்து விளையாடுதல்.

109. குழந்தைகளுக்கு இந்தச் சூழல் அமையும் போது அவர்கள் மொழியை இயல்பு நிலையில் கற்றுத் தன்வயப்படுத்துகிறார்கள்

(1) ஒரு சமயத்தில் ஒரு மொழி மட்டும் உள்ள சூழல்.

(2) வாழிடச் சூழலில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட மொழிச் சூழல்.

(3) எலக்ட்ரானிக் மற்றும் அச்சு ஊக்கம் உள்ள சூழல்.

(4) கற்கும் மொழியின் இலக்கண அமைப்பு அளிக்கப்படும் சூழல்.

110. ஒரு பாடப்பகுதியைப் படிக்கும் போது பின் வருவனவற்றில் எது மிகமிக முக்கியத்துவம் உடையது ?

(1) பாடப்பகுதியின் ஒவ்வொரு சொல்லையும் படித்தல்.

(2) சொல் நிறுத்தற்குறிகளில் கவனம் குவித்தல்.

(3) எழுதப்பட்ட பாடப்பகுதியின் பொருளை அறிதல்.

(4) சறியான உச்சரிப்புடன் குரல் விட்டு வாசித்தல்.

111. மொழிக் கற்பித்தலின் நோக்கங்களில் பின் வருவனவற்றில் எது உள்ளடங்காதது ?

(1) புரிந்து கொண்டு வாசிக்கும் திறன்.

(2) கருத்துகளை முயன்று வெளிப்படுத்துதல்.

(3) அவர்கள் கேட்பதின் பொருளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல்.

(4) ஆற்றொழுக்கான முறையில் எழுதும் திறனை வளர்த்தல்.

112. ஒலியன்கள் குறித்த புரிந்தறிவு அதிகம் இத்துடன் தொடர்புடையது :

(1) கவனித்தறிதல் திறன்

(2) பேச்சுத்திறன்

(3) வாசித்தல் திறன்

(4) எழுதுதல் திறன்

113. குழந்தைகள் மொழியளவில் உள்ளார்ந்த _________ திறன் கொண்டுள்ளதாக நோம் சாம்ஸ்கி நம்புகிறார்.

(1) மொழித்தன்வயப்படுத்தும்

(2) போலிசெய்தல்

(3) மாறுதலுறும்

(4) மொழி பெயர்ப்புத்

114. மொழித் திறமைகள் _________ வழியாக கற்பிக்கப்பட வேண்டும்.

(1) போலி செய்தல்

(2) தனித்த ஒரு முறை

(3) விரிவான விளக்கங்கள்

(4) ஒருங்கிணைந்த வழிமுறைகள்

115. தொடக்க நிலை மாணவர்களைப் படம் வரைந்து வண்ணம் தீட்டும்படி ஒரு ஆசிரியர் ஊக்கப்படுத்துகிறார். அவர் இதன் வழியாக :

(1) மாணவர்களை வகுப்பறையில் அமைதியாக இருக்கச் செய்கிறார்.

(2) நுண்கலை அறிவுத்திறனை வளர்க்கிறார்.

(3) குழந்தைகளின் கலைத்திறனை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கிறார்.

(4) மாணவர்களை ஒரு வேலையில் ஈடுபடுத்துகிறார், அவ்வளவே.

**116.** பேச்சு மொழித்திறனை மேம்படுத்த பின் வருவனவற்றில் எந்தப் பயிற்சி மிக அதிகப் பலனிப்பது ?

(1) தனித்தும், குழுவாகவும் கவிதைகளை ஒப்பித்தல்.

(2) பாத்திரமேற்று நடித்தலில் பங்கேற்றல்.

(3) பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு அத்தியாயத்தை ஆசிரியர் வாசிக்க அதனுடன் இணைந்து குழுவாக வாசித்தல்.

(4) ஆசிரியருடன் இணைந்து சரியான உச்சரிப்பில் சொற்களை வாசிக்கப் பழுகுதல்.

**117.** ஒரு அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள முறையில் ஒரு குறிப்பிட்ட கதையை வரிசைப்படுத்திக் கூறும்படி மூன்றாம் வகுப்பு மாணவர்களை ஒரு ஆசிரியர் கேட்கிறார். இந்தச் செயல்பாடு இதற்குப் பயன்படும்:

(1) படித்துப் புரிந்து கொள்ளுவது.

(2) புரிந்து கொள்ளுதலுக்கான உள்ளீடு.

(3) மாணவர்களின் எழுத்துத் திறனை மேம்படுத்தல்.

(4) மாணவர்களின் பேச்சு நேரத்தைக் குறைத்தல்.

**118.** இரண்டாம் வகுப்பு ஆசிரியர் வகுப்பறையில் உள்ள பொருள்களின் பெயர்களை எழுதி ஒட்டி வைக்கிறார். பொருள்களையும் அவற்றின் பெயர்களையும் இணைத்து அறிய மாணவர்களுக்கு அது உதவுகிறது. இது மாணவர்களின் வேறு ஒரு திறனை வளர்க்கவும் உதவுகிறது.

(1) இலக்கணம்

(2) எழுத்துத்திறன்

(3) சொல் வளம்

(4) கையெழுத்து

**119.** ஒரு குழந்தையின் மொழிப் புழங்கும் திறனை அறியப் பின் வருவனவற்றில் எந்த ஒன்று குறைவான பயனளிக்கும் மதிப்பீட்டு முறை ?

(1) கதை சொல்லுதல்

(2) கதை எழுதுதல்

(3) ஒரு நிகழ்வை விவரித்தல்

(4) சொல்வதெழுதுதல்

**120.** மாணவர்களின் மொழித்திறனை வளர்க்கப் பின் வருவனவற்றில் எந்தக் கேள்வி மிகவும் பயனளிக்கக் கூடியது ?

(1) உனக்குப் பிடித்த புத்தகங்களில் ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக.

(2) 'தேர்வு செய்க' என்ற சொல்லைப் பயன்படுத்தி ஒரு வாக்கியம் உருவாக்குக.

(3) உனக்கும் உன் அம்மாவிற்கும் இடையிலான ஒரு உரையாடலை எழுதுக.

(4) நீ படித்த கவிதையின் படைப்பாளர் பெயரைக் குறிப்பிடுக.

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே ***பகுதி* - V** [***கே.எண்: 121 - 150***] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - V [Q.No. 121-150],** if they have opted **TAMIL** as **LANGUAGE - II** only.

## PART – V
## LANGUAGE – II
## தமிழ்

**பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 121-128)**

மகாயுத்த ஆரம்ப காலத்தில் புதுவைத் துறைமுகத்தில் எம்டன் என்னும் ஜெர்மனிக் கப்பல் வந்ததற்காகப் புதுவை வாசிகளில் ஏழைகளும் பணக்காரருமாகப் பலபேர்கள் குடும்ப சகிதம் மேற்கில் பத்துப் பதினைந்து மைல் தூரமுள்ள கிராமங்களுக்குப் போய்விட்டார்கள். அதிலொரு கிராமம் கூனிச்சம்பட்டு. கூனிச்சம்பட்டுக் கிராமத்தார் தங்களூரை நோக்கி அஞ்சி ஓடிவரும் புதுவை வாசிகளை வரவேற்று, அவர்கள் தங்கிச் சமையல் செய்து கொள்ளத் தாங்கள் வசிக்கும் வீடுகளிலேயே இடம் கொடுத்தனர். கூனிச்சம்பட்டுக் கிராமத்தார் தம்மை நாடிவந்தவர்கள் அனைவரும் மொத்தத்தில் பட்டினவாசிகள் என்று கருதினார்களேயன்றி அவர்களில் இவர் இன்ன ஜாதி என்பதை நினைக்கவில்லை. பட்டினவாசிகளும் தங்களுக்குத் தங்க இடம் கொடுத்தவர்களும் இன்னவர் இன்ன ஜாதி என்பதை அலசிப் பார்த்துத் தத்தமக்கு ஏற்ற ஜாதிக்காரர் வீட்டில் தங்கினதாகவும் சொல்லமுடியாது. எனவே கூனிச்சம்பட்டில் புதுவை வாசிகள் தங்கியிருந்த வரைக்கும் தமது ஜாதிப் பைத்தியத்தினின்று நீங்கிச் சமத்துவ வாழ்வு வாழ்ந்தனர். புதுவைவாசிகள் இரண்டொருநாள் கூனிச்சம்பட்டியில் சமத்துவ மாயிருக்க ஜெர்மனிக் கப்பல் புதுவைத் துறைமுகத்துக்கு வரவேண்டியிருந்தது!

**121. கூனிச்சம்பட்டுக் கிராமத்தார் ________ புதுவை வாசிகளுக்கு ________ இடம் கொடுத்தனர்.**

(1) அஞ்சி ஓடிவரும், தோட்டங்களில்

(2) அஞ்சி ஓடிவரும், வசிக்கும் வீடுகளில்

(3) கூட்டமான, உணவு உண்ண

(4) அழுது நின்ற, வசிக்கும் வீட்டுக்கு வெளியே

**122. நாடிவந்தவர்கள் ________, அவர்களிடம் ________ என்ற பேதம் பார்க்கவில்லை.**

(1) புதுவை மக்கள், பணக்காரர் ஏழை

(2) பட்டின வாசிகள், இன்ன ஊர்

(3) பட்டின வாசிகள், இன்ன ஜாதி

(4) புதுவை மக்கள், இன்ன வீட்டினர்

**123.** வரவேற்றபின்________ வீடுகளில் இடம் கொடுத்தனர். அதற்குக் காரணம் அவர்கள் தம்மை _______ எனக் கருதினர்.

(1) சமையல் செய்து கொள்ள, நாடி வந்தவர்கள்

(2) உறங்குவதற்கு, கேட்டுக் கொண்டனர்

(3) சமையல் செய்து தர, தேடி வந்தவர்கள்

(4) விருந்து உண்ண, அடைக்கலம் கேட்டு வந்தவர்கள்

**124.** புதுவை வாசிகள் _________ நீங்கி _______ வாழ ________ புதுவைத் துறைமுகத்துக்கு வரவேண்டியிருந்தது.

(1) ஒற்றுமை, சமத்துவமுடன், ஜெர்மனிக் கப்பல்

(2) சாதிப்பைத்தியம், சமத்துவ வாழ்வு, ஜெர்மனிக் கப்பல்

(3) சாதிப் பைத்தியம், சமத்துவ வாழ்வு, உணவுக் கப்பல் ஒன்று

(4) அச்சம், நிம்மதியுடன், ஜெர்மனிக் கப்பல்

**125.** கூனிச்சம்பட்டு ஊர்ப் பெயர் இப்பத்தியில் எத்தனை முறை இடம் பெற்றுள்ளது ?

(1) நான்கு

(2) மூன்று

(3) ஐந்து

(4) ஆறு

**126.** சில நாட்கள் சாதிப் பித்து இன்றி மக்கள் இருந்ததற்கு இங்கு கூறப்படும் காரணம் :

(1) பட்டினவாசிகளாய் இருந்தது.

(2) போர்க் கப்பலால் ஏற்பட்ட அச்சம்.

(3) நாடிவந்தவர்களின் நல்லெண்ணம்.

(4) வரவேற்று இடமளித்த கிராமத்தார்.

**127.** இதில் குறிக்கப்பட்டுள்ள ________ எண்ணுப் பெயர்கள் ________.

(1) சில, மைல், கிராமம்

(2) இரண்டு, சிலநாட்கள், இரண்டொரு

(3) நான்கு, பத்து, பதினைந்து, இரண்டு, ஒன்று

(4) இரண்டு, பத்து, பதினைந்து

**128.** மகாயுத்தம் என இங்கு குறிக்கப்பட்டுள்ளது.

(1) இந்திய சுதந்திரப் போர்

(2) முதலாம் உலகப் போர்

(3) இரண்டாம் உலகப் போர்

(4) முதல் இந்தியப் போர்

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 129-135)**

பாடலீபுரம் என்னும் நகரத்தில் அசோக சக்கரவர்த்தியின் ஆதரவில் மொக்கலபுத்த திஸ்ஸ என்னும் தேரரின் தலைமையில் மூன்றாவது பௌத்த மகாநாடு கூடியதென்றும், ஒன்பது திங்கள் வரையில் அந்த மகாநாட்டில் பௌத்தமத ஆராய்ச்சி நடைபெற்ற தென்றும், மகாநாடு முடிந்தபின்னர்ப் பௌத்த மதத்தைப் பரப்புவதற்காகப் பல பிக்குகள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர் என்றும், இலங்கைக்கு அனுப்பப்பட்டவர் அசோகரது மகனாராகிய மகிந்தர் என்பவர் என்றும், இந்த மகிந்தர் இத்திரியர், உத்தியர், சம்பலர், பத்தரசாரர், சாமனர சுமணர் என்னும் பிக்குகளைத் தம்முடன் அழைத்துக்கொண்டு இலங்கை வந்து பௌத்த மதத்தைப் பரவச் செய்தார் என்றும் தீபவம்சமும் மகாவம்சமும் கூறுகின்றன. இந்த நூல்கள் கூறுகின்ற மகிந்தர் என்பவர் மகேந்திரர் ஆவர். மகேந்திரர் என்னும் பெயர் பாளி மொழியில் மகிந்தர் என்று வழங்கப்படும். இந்த மகிந்தர் அல்லது மகேந்திரர் என்பவரை இலங்கை நூல்கள் அசோகரது மகனார் என்று கூறுகின்றன. ஆனால், இந்தியாவில் உள்ள நூல்கள் இவரை அசோகரது தம்பியார் என்று கூறுகின்றன. மகனாராயினும் ஆகுக, தம்பியாராயினும் ஆகுக, இந்த மகேந்திரர் அசோகரால் அனுப்பப்பட்டவர் என்பது மட்டும் உறுதி. அன்றியும், இவருடன் இலங்கைக்கு வந்தவர்களில் ஒருவரான சாமனர சுமணர் என்பவர் அசோக மன்னரது பெண் வயிற்றுப் பேரர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இந்த மகேந்திரரும் அவரைச் சேர்ந்த ஐந்து பிக்குகளும் கி.மு. 250 – இல் இலங்கைக்கு வந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுவர். இதனால், அசோக மன்னர் காலத்தில் மகிந்தர் அல்லது மகேந்திரர் என்பவரால் இலங்கைத்தீவில் பௌத்தமதம் பரவியது என்றும், அதே காலத்தில்தான் இலங்கையைடுத்த தமிழ் நாட்டிலும் இந்த மதம் முதல் முதல் வந்திருக்கவேண்டும் என்றும் துணியலாம்

**129. _________ பௌத்த மகாநாடு _________ திங்கள் நடந்தது, அதன் முடிவில் _________ பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப் பட்டனர்.**

(1) முதலாம், ஒன்பது, பிக்குகள்

(2) மூன்றாவது, இரண்டு, மூன்று பிக்குகள்

(3) மூன்றாவது, ஒன்பது, பல பிக்குகள்

(4) இரண்டாவது, ஒன்பது, பல பிக்குகள்

**130. ________ என்ற பெயர் _______ மொழியில் ________ என மாறும்.**

(1) அசோகர், வட, அசோகா

(2) மகேந்திர, பாளி, மாகேந்திரா

(3) அசோகா, பாளி, அசோகன்

(4) மகேந்திரர், பாளி, மகிந்தர்

**131. _________ அசோக மன்னரது பெண் வயிற்றுப் பேரர், இவர் இலங்கை சென்ற ____________ ஒருவர்.**

(1) மகிந்தர், ஏழு பிக்குகளில்

(2) சாமனர சுமணர், ஐந்து பிக்குகளில்

(3) சாமனர சுமணர், அசோகப் படையினரில் ஒருவர்

(4) பத்திரசாரர், ஐந்து பிக்குகளில்

**132. இதில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் ________, _________ இவை _________ மொழியில் எழுதப்பட்டவை.**

(1) தீபவம்சம், மகாவம்சம், பாளி

(2) தீபவம்சம், மகாவம்சம், பிக்கு

(3) இலங்கையில் எழுதப்பட்டவை, சிங்கள

(4) சூளவம்சம், பிங்கலம், கல்வெட்டு

**133. மூன்றாவது புத்த மாநாடு _________ தலைமையில் ________ ஆதரவில் நடந்தது.**

(1) மகேந்திரர், சம்பலர்

(2) மொக்கலபுத்த திஸ்ஸ, அசோகர்

(3) பத்திரசாரர், அசோக மன்னர்

(4) அசோகர், தேரரின்

**134. இலங்கை நூல்கள் மகேந்திரர் ________ மகன் என்று கூறுகின்றன, இந்திய நூல்கள் அவரது __________ எனக் கூறுகின்றன.**

(1) தேரரின், சகோதரர்

(2) அசோகரது, பேரன்

(3) அசோகரது, தம்பியார்

(4) உத்தியரின், தம்பியார்

**135. இலங்கைத்தீவில் பௌத்த மதம் பரவியதற்கு __________ அனுப்பி வைத்த __________ பணி செய்தார்.**

(1) மகேந்திரர், பிக்கு

(2) அசோக மன்னர், மகேந்திரர்

(3) பிக்குகள், உத்தியர்

(4) பௌத்தர்கள், பிக்கு சுமணர்

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 136-150)**

**136. குழந்தையின் மொழியேற்றறியும் செயல்பாட்டில் பின் வருவனவற்றில் எது முக்கிய பங்காற்றுகிறது ?**

(1) ஆசிரியர்

(2) குடும்பம்

(3) பள்ளிக் கூடம்

(4) ஊடகங்கள்

**137. இலக்கண விதிகளை மனப்பாடம் செய்வது இந்த கற்பித்தல் முறையின் மையப்பகுதியாக உள்ளது.**

(1) அமைப்பியல் வழிமுறை

(2) நேரடி முறை

(3) இலக்கண மொழிபெயர்ப்பு முறை

(4) இயற்கை வழிமுறை

**138. மொழி கற்பிக்கும், கற்கும் நிலையில் பின் வருவனவற்றில் எது முக்கியத்துவமற்றது ?**

(1) ஊக்கமளித்தல்

(2) தன்னம்பிக்கை

(3) கற்பது பற்றிய மனப்பாங்கு

(4) மொழி பெயர்ப்பு

**139. குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுக்கும் போது ஒரு ஆசிரியராக நீங்கள் என்ன செய்வீர்கள் ?**

(1) மொழியின் அகர வரிசை எழுத்துக்களை எழுதும் படி குழந்தைகளைக் கேட்பேன்.

(2) குழந்தைகளின் எண்ணங்களை எழுத அவர்களுக்கு வாய்ப்பளிப்பேன்.

(3) ஒரு பத்தியை மனப்பாடம் செய்து அதனை நல்ல கையெழுத்தில் எழுதச் செய்வேன்.

(4) கரும்பலகையில் எழுதிய எழுத்துகளைப் பார்த்து எழுத குழந்தைகளுக்கு வாய்ப்பளிப்பேன்.

**140. கற்பித்தல் கற்றல் பாடக் கருவிகளைத் (டி எல் எம்) தேர்வு செய்யும் போது பின் வருவனவற்றில் எந்தக் கருத்து முக்கியமானது ?**

(1) அவை இலகுவாகக் கடைத் தெருவில் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

(2) அவை விலை மிகுந்த பொருள்களாக இருக்கக் கூடாது.

(3) அவை மாணவர்களால் உருவாக்கப் பட்டவைகளாக இருக்க வேண்டும்.

(4) அது பொருள் பின்புலத்தில் பொருந்தும்படி அமைந்து ஒருங்கிணைந்த முறையில் பயன் படுத்தப்பட வேண்டும்.

**141. இரண்டாம் வகுப்பு மாணவர்களில் சிலருக்கு சில எழுத்தொலிகளை உச்சரிப்பதில் சிரமம் நேர்கிறது. அவர்கள் சிரமத்தை நீக்க பின்வரும் முறைகளில் எது மிகப்பயனுடைய உத்திமுறை ?**

(1) மனித வாயின் மாதிரி வடிவைப் பயன்படுத்தி ஒலித்தல் முறையின் முக்கியத்தை விளக்கிச் சொல்ல வேண்டும்.

(2) ஓசை இணைப்புடைய சொற்களைப் பயன்படுத்தி அவற்றை உச்சரிக்கச் செய்து அதன் ஒலிப்பு வடிவை அடையாளம் காணச் செய்ய வேண்டும்.

(3) ஒரு பாடப்பகுதியை குரல் விட்டு வாசித்து அதன் சொற்களை அடிக் கோடிட்டு ஒலிப்பு முறைகளை விளக்கிச் சொல்ல வேண்டும்.

(4) பயிற்சி மற்றும் தொடர் செய்முறைகள் அளித்து திரும்பத் திரும்பச் சொல்ல வைத்து ஒலிப்பு முறையின் சிரமத்தைக் கடந்துவரச் செய்ய வேண்டும்.

**142. இலக்கண விதிமுறைக்கு முதன்மை அளித்து அவற்றுக்கான பலவகை எடுத்துக் காட்டுகளை அளித்து கற்பிக்கும் முறை _______.**

(1) இன்டக்டிவ் முறை

(2) டிடக்டிவ் முறை

(3) இலக்கண மொழிபெயர்ப்பு முறை

(4) நேரடி முறை

**143. ஒரு மொழியைக் கற்பவர் மொழியை இதன் வழி தன்வயப்படுத்துகிறார் :**

(1) இயற்கையான சூழலில் உறவாடல்களை செய்யும் போது மொழியைப் பயன்படுத்துவதன் வழியாக.

(2) மொழியின் கட்டமைப்பை பகுத்தாய்வு செய்வதன் வழியாக.

(3) அம்மொழியின் இலக்கியங்களை வாசிப் பதன் வழியாக.

(4) ஒரு மொழியைப் பேசும் மக்களின் பண்பாட்டைப் பற்றிக் கற்றறிவதன் வழியாக.

**144. நுண்கலை மூளைத் திறன் வளர்ச்சிக்கு உதாரணமாக அமைவது எது ?**

(1) ஏறுதல்

(2) தாவுதல்

(3) எழுதுதல்

(4) வாசித்தல்

**145. ஒரு வகுப்பறையில் பன்மொழித்தன்மையை மேம்படுத்த ஒரு ஆசிரியர் கேட்கும் கேள்வி பின் வருவனவற்றுள் எது ?**

(1) பலூன்கள் எவ்வளவு உயரம் வரைப் பறக்க முடியும்.

(2) உங்கள் மொழியில் காய்கறிகளின் பெயர்களை எழுதுக.

(3) உன்னிடம் செல்லப் பிராணி உள்ளதா ?

(4) நீங்கள் கடிதங்களை எழுதிவிட்டீர்களா ?

**146. தொடக்கநிலை வகுப்புகளில் குழந்தைப்பாடல்கள் பயன்படுத்தப்பட வேண்டும், காரணம் அவை :**

(1) கற்கும்மொழியைப் பேச மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

(2) மாணவர்களை அது ஒழுங்கு முறையில் வைக்கிறது.

(3) மொழியின் இலக்கணத்தைக் கற்க உதவுகிறது.

(4) கடினமான சொற்களை விளக்கி, அவற்றை வைத்து வாக்கியங்களை உருவாக்க உதவுகிறது.

**147. கவனித்தறியும் பயிற்சியளிக்க ஒரு ஆசிரியர் முடிவு செய்கிறார். பிரைன் ஸ்டோர்மிங் முறையைப் பயன்படுத்தி சில கேள்விகளை எழுப்பி ஆர்வமூட்டும் கலந்துரையாடலை உருவாக்குகிறார். இந்த பயிற்சிக்கான தேவை இதனைச் சேர்ந்தது :**

(1) பிரிலிசனிங் செயல்பாடுகள்

(2) கவனிக்கும் பொழுதான செயல்பாடு (ஒயல் லிசனிங்)

(3) போஸ்ட் லிசனிங் செயல்பாடுகள்

(4) கவனித்தறியும் செயல் பாட்டைத் தொடரும் செயல்

**148. மொழி வகுப்பில் படங்கள்/ சுவரொட்டிகளைப் பயன்படுத்துவது குறித்த கருத்தில் பின் வருவனவற்றில் எது தவறானது ?**

(1) படங்களைக் கவனிக்க குழந்தைகளுக்கு அது ஒரு வாய்ப்பை அளிக்கிறது.

(2) குழந்தைகள் தம் எண்ணத்தை வெளிப்படுத்தவும் படங்களை அடிப்படையாக வைத்து எழுதவும் வாய்ப்பு ஏற்படுத்திக் தருகிறது.

(3) குழந்தைகளின் கற்பனை உலகை விரிக்க இடம் அளித்து, படைப்பாற்றலை வளர்க்கிறது.

(4) கவனித்தறியும் திறமையை வளர்க்க அது வாய்ப்பளிக்கிறது.

**149. வளர்நிலை மொழிக்கற்றல் நிலையில் ________ கூட எழுதுதல் என்ற செயல்பாட்டிலேயே அடங்குகிறது.**

(1) எழுத்தை வடிவமைத்தல்

(2) சொற்களை எழுதுதல்

(3) வாக்கியங்களை உருவாக்குதல்

(4) படம் வரைதல்

**150. மொழியைப் பயன்படுத்தும் திறனை மதிப்பிட பின் வருவனவற்றில் எது முக்கிய பங்கு வகுக்கிறது ?**

(1) செக்லிஸ்ட்

(2) ரேட்டிங் ஸ்கேல்

(3) போர்ட் போலியோ

(4) கருத்துப்பரிமாற்றம்

## SPACE FOR ROUGH WORK

**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம் பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர் விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப் பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வுக் இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्वीच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान हाज़िरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल / कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।**

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY:**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/ room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/ rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/ Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic / Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***